# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவர்ஆண்டு2030கார்த்திகை14செவ்வாய்க்கிழமை(30-11-1999)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 3


# புலிகளுடன் பேசத் தயார்!

## ஆளும் கூட்டணியின் செயலர் அறிவிப்பு

லண்டன், நவம்பர் 30

"புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது. ஆனால் சமாதானப் பேச்சுக்குப் புலிகள் விடுத்திருக்கும் அழைப்பின் நம்பகத் தன்மைதான் சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றது.

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டி. எம். ஜயரத்ன இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்,

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பிரபாகரன் விடுத்த சமாதானக் கோரிக்கை ஆக்கபூர்வமானதா என்பதை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. தலைமையகம் அதிகாலைதாக்கப்பட்டது

## வெள்ளை வான் குழு கைவரிசை

கொழும்பு, நவ. 30

ஐ. தே. கவின் தலைமை அலுவலகமான ஸ்ரீகோத்தா நேற்று அதிகாலை தாக்குதலுக்கு உள்ளானது.

அதிகாலை 2. 30 மணி அளவில் வெள்ளை வானில் வந்த 15 முதல் 20 பேர் கொண்ட குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியது.

அலுவலகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த ரணிலின் கட்அவுட் மற்றும் அங்கிருந்த பதாகைகளை அந்தக் குழு அடித்து நொருக்கியதாகவும்—

அலுவலகத்தின் கண்ணாடிகளை அடித்துச் சேதப்படுத்தியதுடன் அங்கிருந்தவர்களைத் தாக்கியதாகவும்— ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று ஐ. தே. க. குற்றஞ்சாட்டியுள்ளது.

(இ 3)

# காவலரண் இடிந்ததில் மூன்று சிப்பாய்கள் காயம்

## கொழும்புத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 30

கொழும்புத்துறையில் நேற்றுப் பிற்பகல் படையினரின் காவலரண் ஒன்று இடிந்து விழ்ந்ததில் 3சிப்பாய்கள் காயமடைந்தனர். அவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

காவலரணின் அயற்பகுதிகளில் மழைநீர் தேங்கிநின்றமையே காவலரண் இடிந்து விழக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-7]

## ரொரண்டோவில் நடந்த

# மாவீரர் தின நிகழ்வுகளில் 25ஆயிரம் கனடாத் தமிழர்!

ரொரண்டோ, நவ. 30

கனடாவின் ரொரண்டோ மாநிலத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்து கொண்டனர்.

ரீ. என். ஏ. ஸ்ரேடியத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பெருமளவு தமிழ் மக்கள் வருகை தந்ததால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக மாவீரர் தின நிகழ்வுகள் மூன்று அமர்வுகளாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹற்றனில் குண்டு மீட்பு

கொழும்பு, நவ. 30

ஹற்றனில் நேற்று குண்டு ஒன்று பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியில் தமிழர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்

இதேவேளை குளியாப்பிட்டியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மூன்று தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(உ-5)

## 7 சிப்பாய்களும் கொழும்பில்!

கொழும்பு, நவ. 30

விடுதலைப் புலிகளினால் கடந்த சனிக்கிழமை வன்னியில் வைத்து விடுவிக்கப்பட்ட ஏழு இராணுவத்தினரும் நேற்று மாலை கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் ஏழு பேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்புப்பட்டி போராட்டம்!

## நாளை பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், நவம்பர் 30

மடுதேவாலயம் மீது கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கறுப்புப்பட்டி அணியும் போராட்டம் நாளை புதன்கிழமை நடைபெறும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நாளை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலைகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில்பிரார்த்தனை, உபவாசம்

மன்னார், நவ. 30

மடுத் தேவாலயம் மீதான தாக்குதல் போன்று எதிர்காலத்தில் நடைபெறக் கூடாது என்று பிரார்த்தித்து மன்னார் மாவட்ட கத்தோலிக்க தேவாலயங்களில் பிரார்த்தனையும் உபவாசமும் நடைபெற்று வருகிறது

மடுத் தேவாலயத்தில் பலியானவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும், மடுத் தேவாலயத்தில் சிந்திய இரத்தத்திற்கு பரிகாரம் வேண்டியும்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த உபவாச பிரார்த்தனையில் நாட்டின் சமாதானத்துக்காகவும் பிரார்த்திக்கப்படுகின்றது.

மன்னார் மறை மாவட்டத்தில் இந்தப் பிரார்த்தனையிலும் உபவாசத்திலும் கத்தோலிக்க குருமார்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் பங்கு பற்றியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-5-21)

# மடு அகதிகளுக்கு உடனடியாக போதிய உணவு அனுப்புங்கள்!

## வவுனியா அரச அதிபருக்கு அவசர கோரிக்கை

மன்னார், நவ. 30

மடுத்தேவாலயத்தில் தஞ்சமடைந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து அங்கு போதிய அளவு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்குமாறு வவுனியா அரச அதிபருக்கு அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

மடுப் பங்குத் தந்தை மற்றும் மன்னார் ஆயர் ஆகியோர் இந்த அவசரவேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நேற்றுடன் சுமார் 14ஆயிரம் பேர் மடுவில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனவும் —

இவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய நிலையில் மடுத் தேவாலயப் பகுதியில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் இல்லை எனவும் —

அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மடுப் பகுதியில் மருத்துவ வசதிகளை உடனடியாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 68, 574 சதுர மீற்றர் நிலப்பரப்பில் இதுவரை 480 மிதிவெடிகள் அழிப்பு

## கண்ணிவெடி அகற்றும் குழுக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 30

குடாநாட்டில்கண்ணிவெடிகளை அகற்ற இதுவரை 68 ஆயிரத்து 574 சதுர மீற்றர் நிலப்பரப்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இருந்து இதுவரை 480 மிதிவெடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கண்ணிவெடி அகற்றும் குழுவின் கூட்டத்தில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

யாழ்.அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் கலந்து கொண்[illegible]

யாழ்ப்பாணம், உடுவில், நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய [illegible]ரதேச செயலர் பிரிவுகளில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்—

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிப் பகுதியில் கண்ணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடி அகற்றும் பணி இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம். நவ. 30

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக இந்தமாதத்துடன் நிறுத்தப்படவுள்ளது.

இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள ஸிம்பாப்வே நிபுணர் குழு விடுமுறையில் நாடு திரும்ப விருப்பதாலும் —

தற்போது ஆரம்பித்துள்ள மழைகாரணமாக பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாலும்—

கண்ணிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## முட்டை விலை உயர்வு

யாழ். மாவட்டத்தில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 5 ரூபா 50 சதமாக விற்பனையான முட்டை தற்போது 9 ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றது. (இ-72)

### தகுதிகாண் ஆசிரியர் நியமனம்

## முடிவு திகதியை நீடிக்க அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 30

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் போட்டிப்பரீட்சையின்றி தகுதிகாண் ஆசிரியர்களை நியமிப்பதற்காகக் கோரப்பட்ட விண்ணப்பத்தின் முடிவு திகதியை நீடிக்க வேண்டும் என்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கல்விச்சேவைக் குழுவைக் கேட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான சரியான தகவல்கள் குடாநாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் —

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் போதாது இருந்தது என்றும் —

இதன் காரணமாக விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்க வேண்டும் என்றும்— அரச அதிபர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் — விண்ணப்பதாரிகளின் வயது எல்லையை 40 ஆக உயர்த்த வேண்டும் என்றும் அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிப்பாய் காயம்

சிப்பாய் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் அந்தச்சிப்பாய் காலில் படுகாயம் அடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இடம்பெற்றது. (உ-180)

## திருத்தம்

28-11-99 உதயன் 6 ஆம் பக்கத்தில் வெளியான யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்ற வரவு செலவுத்திட்ட விளம்பரத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்பதே சரியானது ஆகும். 28 ஆம் திகதி தொடக்கம் என்று தவறுதலாக அச்சாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது யூறோவில் நிறுவனத்தின் இயக்குநரும் முன்னாள் மாநகரசபைப் பொறியியலாளருமான

திரு. மா. இராமதாசன்

அவர்களுடைய அன்பு மாமியார்

### திருமதி அ. கனகசபை

அவர்கள் 29-11-99 திங்கட்கிழமை திருநெல்வேலி இல்லத்தில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யூறோவில் நிறுவன அலுவலர்களும் ஊழியர்களும்

866, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(71379

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம்
ஆட்பதிவுத் திணைக்கள அலுவலர்
திரு. பென் அலோசியஸ்
அவர்களின் அன்புத் தந்தையார்

### பீற்றர் அல்பேட் அலோசியஸ்

அவர்கள் 29—11—99 அன்று இறைபதம் அடைந்தமையால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

யாழ்ப்பாணம் ஆட்பதிவுத் திணைக்கள
கருத்திட்ட முகாமையாளரும்
சகோதர உத்தியோகத்தர்களும்.

76, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(71386)

## மோட்ஷ தீபக் கிரியைகளும் அந்தியேட்டி அழைப்பும்



### சிவஸ்ரீ கு. உருத்திரமூர்த்திககுருக்கள்

( கு. முருகையாக்குருக்கள் )

அவனியில் தோற்றம் 08 — 10 — 1928

சிவலிங்க ஐக்கியம் 17 — 11 — 1999

சிவனோடு கலந்து சிவன்முத்தியடைந்த
எம் குலவிளக்கே! மோட்ஷ விளக்கேற்றி
வணங்குகிறோம் சுடரொளியாக நின்று
எம்மை வாழ்விப்பாய்.

நாளைய தினம் புதன்கிழமை (01-12-99) காலை எம் இல்லத்தில் நடைபெறும் மோட்ஷ தீபக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆதி வீரபத்திரர் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[71383]


## ராஜா

யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
அர்ஜுன் – மீனா, ரம்பா
மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை
10-30, 2-30,
3 ஆம் திகதி முதல்
மகாபிரபு
(கி/9952)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அர்ஜுன் – குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
காட்சிகள்:
11-00, 2-30, 5-00
(புதிய நேரம்)
(71336)

## லிபேட்டி அச்சுவேலி.

சில தினங்கள் மட்டும்
விஜயகாந்
நடித்த
கண்ணுபட போகுதய்யா
காட்சிகள்: 10-30, 2-30
[illegible] 678
(71295)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
திருமதி த. புவனமாலா
அவர்களின் அன்புத் தந்தையார்

### முருகன் வைரமுத்து

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்.

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக்கிளை.

(சி/10034)

## மரண அறிவித்தல்கள்

### ஜீவரத்தினம் கெனடியோசப்

ஜீவரத்தினம் கெனடியோசப் 29—11—99 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏ. ஜீவரத்தினத்தினதும் திருமதி லில்லி ஜீவரத்தினத்தினதும் அன்பு மகனும் ராஜன், பெணிற்றா, வரதன். வாசுகிஆகியோரின் அன்புச் சகோதரரும் எஸ். நரேந்திரநாதனின் மைத்துனரும் நிரோசினியின் சின்னமாமாவும் எரிக், செலின் ஆகியோரின் சித்தப்பாவும் லீமாவின் மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி லில்லி ஜீவரத்தினம்
(தாய்)

34/2, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10036)

### திருமதி அன்னபூரணம் கனகசபை

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி அன்னபூரணம் கனகசபை 29 – 11 – 99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சி. கனகசபையின் அன்பு மனைவியும் இந்திராவதி (மாலைதீவு), கருஷ்ணாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், முத்துலிங்கம் (மாலைதீவு), இராமதாசன் (யூரோவில்) ஆகியோரின் மாமியும் மயூரன் (அமெரிக்கா), துளசி, வித்தியா (மாலைதீவு), தேவமாறன், ஜெயமாறன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-11-99) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. இராமதாசன்
( மருமகன் )

சைவப்பாடசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(71380)

### சின்னையா முருகேசு

கரணவாய் தெற்கு கோணாவளையைச் சேர்ந்த சின்னையா முருகேசு 29 – 11 – 1999 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் தவமலர் (பிரதேச சபை புலோலி), சுரேஸ் (ஹொலண்ட்), சுகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலநாதன் (அபிராமி ஸ்ரோர்ஸ், நெல்லிபடி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-11-1999) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கமலநாதன்
(அபிராமி ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

கோணாவளை,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/10037)

### பீற்றர் அல்பேட் அலோசியஸ்

பீற்றர் அல்பேட் அலோசியஸ் 29-11-99 அன்று காலமானார்.

இவர் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ் சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற அற்புதமலர் அன்ரனி, பென் அலோசியஸ் (விசேட ஆட்பதிவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்). திருமதி மங்களம் ஜேசுதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி மாகிறேற் அலோசியஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் சங்கைக்குரிய சகோதரி மேரி பற்றிமா (திருக்குடும்பக் கன்னியர் மடம், இளவாலை) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30-11-99) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பென் அலோசியஸ்
(மகன்)

இல. 8, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

(71385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில்

# மரண தண்டனையை ஒழிக்கக்கோரி பேரணி

## சென்னையில் இன்று நடத்த ஏற்பாடு

சென்னை, நவ. 30

இந்தியாவில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோரி சென்னையில் இன்று மாபெரும் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றினால் மரண தண்டனை வழங்கப்பட்ட 26 தமிழர்கள் உயிர்காப்பு நிதிக் குழு இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

100 அமைப்புக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொள்ள உள்ளன என்று அந்த அமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

பேரணியின் இறுதியில் தமிழக முதல்வர் மு. கருணாநிதியிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது—

ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரதும் மரண தண்டனையைக் குறைக்க கருணை காட்ட வேண்டும், இந்தியாவில் மரண தண்டனையை ஒழிப்பதற்கு முதல்வர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வரிடம் கையளிக்கப்பட உள்ள மகஜரில் வலியுறுத்தப்படும்.

இந்த நால்வரதும் கருணை மனுக்களை முதல்வரும் அமைச்சரவையும் பரிவுடன் பரிசீலித்து மரண தண்டனையைக் குறைக்க முன்வர வேண்டும். கருணை மனுவை ஆளுநர் நிராகரித்தது செல்லுபடியற்றது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு மாநில அரசுகளின் உரிமைகளைக் காத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும்.

தமிழக ஆளுநர் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், தான் அளித்த தீர்ப்பையும் 5 நீதிபதிகள் கொண்ட 'பெஞ்ச்' அளித்த மற்றொரு தீர்ப்பையும் புறக்கணித்தே இந்தத் தீர்ப்பை அளித்துள்ளார். இந்த நால்வரினதும் கருணை மனுக்களை சில நாள்களிலேயே அவர் நிராகரித்திருந்தார்.

அதேசமயம்—

மரண தண்டனை ஒழிப்பு குறித்த தமிழக முதல்வரின் கருத்துக்களை வரவேற்கின்றேன். சோனியா காந்தி கூறி உள்ளதையும் வரவேற்கின்றேன். இந்தியாவில் இரண்டாயிரமாம் ஆண்டில் மரண தண்டனையை ஒழிப்பதற்கு அனைவரும்முன்வரவேண்டும்

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-4)

போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கிலிருந்து

## ராஜீவின் பெயரை அரசாங்கம் நீக்கும் சாத்தியக்கூறு இல்லை

### வாஜ்பாய் திட்டவட்டமாக தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 30

போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் இருந்து முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பெயரை அரசாங்கம் நீக்குவதற்கான சாத்தியக் கூறுகள் எவையும் இல்லை என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் திட்டவட்டமாகக் கூறி உள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரில் காங்கிரஸ் கட்சியினர் போபர்ஸ் பீரங்கி வழக்கில் அரசு ராஜீவ்காந்தியின் பெயரைச் சேர்த்தது தொடர்பாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் வாஜ்பாய் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் இப்போது நீதிமன்றத்தின் முன்உள்ளது. எவருக்காவது ஏதாவது ஆட்சேபங்கள் இருந்தால் அதற்காக அவர்கள் நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் வாஜ்பாய் தெரிவித்தார். (இ-6-4)

## மலேசியத் தேர்தல்கள்: வாக்களிப்பு நேற்று ஆரம்பம்

கோலாலம்பூர். நவ. 30

மலேசிய நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களுக்கான வாக்களிப்பு நேற்றுக்காலை ஆரம்பமானது.

11 மாநிலங்களில் உள்ள 193 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், 394 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

தற்போதைய ஆளும் தேசிய கூட்டணி அரசின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே குறுகிய கால அறிவிப்புடன் இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

ஆளும் தேசிய கூட்டணியின் தலைவரும் நாட்டின் பிரதமருமான மஹதிர் முஹம்மட் நேற்று வாக்களிக்க வந்த போது நாட்டில் சீர்திருத்தம் வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

இந்தத் தேர்தலில் ஆளும் தேசியக் கூட்டணிக்கும் நான்கு எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள புதிய கூட்டணிக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. எனினும் ஆளும் தேசியக் கூட்டணியே வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் அந்தக் கூட்டணி சென்ற முறையைப் போன்று பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்ற முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6-4)

உலக அரங்கில்

## குண்டு வெடிப்பு

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் மாலை குழாய் வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 46 பேர் காயமடைந்தனர். அவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத்தெரிவிக்கப் பட்டது. (இ-6-4)

தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து

# நாகாலாந்து முதல்வர் மயிரிழையில் தப்பினார்

புதுடில்லி, நவ. 30

நாகாலாந்து மாநில முதலமைச்சர் எஸ். சி. ஜமீர் இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இருந்து நேற்று மயிரிழையில் உயிர் தப்பினார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் அவரது மெய்ப்பாதுகாவலுக்குச் சென்ற இரு பொலிஸார் உயிரிழந்தனர், நான்குபேர் காயமடைந்தனர்.

தடை செய்யப்பட்ட நாகாலாந்து தேசிய சோஷலிச அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிம்சேமா என்ற இடத்தில் முதல்வர் தனது வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்—

முதலில் வாகனத்தை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டது என்றும்—

பின்னர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும்— பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலால் நாகாலாந்து ஆதிவாசிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே கடந்த இரண்டு வருடங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதிக்கப்படும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

[இ-6-4]

## நைஜீரியாவில் இன மோதல்; பெரும் வன்முறை மூண்டது!

### 100க்கும் மேற்பட்டோர் பலி

லாகோஸ், நவ 30

நைஜீரியாவின் மிகப் பெரிய நகரமான லாகோஸில் இடம்பெற்று வரும் வன்முறைகளில் சிக்கி கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவின் இருபெரும் இனங்களான யொறுபா, ஹோஸா ஆகியவற்றுக்கு இடையே இந்த வன்முறைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

வன்முறைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளதாகவும் பல நூற்றுக்கணக்கான வீடுகள் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாகவும் லாகோஸில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தை ஒன்றைக் கட்டுப்படுத்துவது யார் என்பதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இந்த வன்முறைகளுக்கு காரணம் என்று பொலிஸார் கூறினர். வன்முறைகள் அதிகம் இடம்பெறும் பகுதிகளில் காலை முதல் இரவு வரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த வன்முறைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-6-4)

## விமானத் தாக்குதலுக்கு முன் எச்சரிக்கை செய்யும் கருவி

### சீனாவின் அதிநவீன கண்டுபிடிப்பு

நியூயோர்க், நவ. 30

விமானத் தாக்குதல்கள் இடம் பெறுவதற்கு முன்னர் அது தொடர்பான எச்சரிக்கையை வெளியிடும் அதிநவீன கருவி ஒன்றை சீனா உருவாக்கி உள்ளது.

அமெரிக்க வாராந்த சஞ்சிகையான 'நியூஸ் வீக்' சஞ்சிகையில் இது தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சீனாவின் இந்த புதிய கருவியினால் அமெரிக்காவின் நவீன குண்டு வீச்சு விமானங்கள் நடத்தும் தாக்குதல்கள் குறித்தும் —

அமெரிக்கா எதிர்காலத்தில் தயாரிக்க உள்ள அதிநவீன விமானங்களின் தாக்குதல்கள் குறித்தும் — சீனா முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்தப் புதிய கருவி எங்கிருந்து செயற்படுகின்றது என்பதை அறியவோ அல்லது அதனைச் சேதப்படுத்தவோ முடியாது என்றும அந்த சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுளது. (இ 6-4)



மடுத்தேவாலயப் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டித்து யாழ். மரியன்னை பேராலயத்தில் நேற்று முன்தினம் யாழ். மறை மாவட்ட நீதிசமாதான ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று கூடல் நிகழ்வின் போதும் இறைவேண்டல் பிரார்த்தனையின் போதும் எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினர் பிரார்த்தனைக் கீதங்கள் பாடுவதை முதலாவது படத்திலும் —

திருச்சபைகளைச் சேர்ந்த குருமார்கள் மற்றும் பொதுமக்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: பொ. இராஜேஸ்வரன் – கோப்பாய்ச் செய்தியாளர்)

## அல் உமா அமைப்பே காரணம்

சென்னை, நவ 30

சென்னை மத்திய சிறையில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைகளுக்கு அல் - உமா அமைப்பின் ஆதரவாளர்களே காரணம் என இந்து முன்னணி அமைப்பாளர் இ. கோபாலன் குற்றம் சாட்டி உள்ளார்.

சிறைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் போது இது குறித்தும் விசாரணை செய்யப்பட வேண்டும் இக்கலவரத்தின் பின்னணியில் இருப்பவர் யார்? கைதிகளை இதற்குத் தூண்டியவர்கள் யார்? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-6-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை மகிந்தன் ஆகிய எனது விசேட அ. அட்டை இல. [0906025193] பாடசாலை அ. அட்டை என்பன வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டன; கண்டெடுத்தவர்கள். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒப்படைத்துதவவும்.

(71339)

சாந்தையர் மடம் பிள்ளையார் கோயிலில் கடந்த 06-11-99 அன்று எனது மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி கோயிலில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(71366)

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட டீப் பிறீசர் (Deep Freezer) மற்றும் பயனியர் றேடியோ செட் (Pioneer Kit) மற்றும் வெற்றுப் பெட்டிகள், போத்தல்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- இல. 398, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(71313)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்திரட்டாதி. 7இல் செவ்வாய், 56 பாவமுள்ள 29 வயதுடைய படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. என்ஜினியர், எக்கவுண்டன் விரும்பத்தக்கது. (வெளிநாடு அல்லது உள்நாடு) தொடர்பு: முருகன் திருமண சேவை, செ. விஜயரட்ணம், நவாலி கிழக்கு, மானிப்பாய். T. P. No 070 - 212326 எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டுமணமக்கள் உண்டு.

(71369)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 30

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 2 மணிக்கு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கப்பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதங்களைத் திருப்பி அனுப்புதல் மற்றும் எதிர்வரும் 5 ஆம் திகதி நடத்தவிருக்கும் உண்ணாவிரதம் தொடர்பாக இதில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# கலைமகள் கல்வி நிறுவனம்

கொக்குவில்.

## G.A.Q, B.A, A/L வகுப்புக்கள்

பொருளியல்

S. விஜயன் B.A. (Hons)

புவியியல்

K.A. ஞானேஸ்வரன் B.A. (Hons)

ஆரம்பம்:

01-12-1999

மாலை 4 மணி

வெகு விரைவில்!

புதிய கல்வியாண்டு வகுப்புக்கள்

யாழ். முன்னணி ஆசிரியர் குழு.

(சி/10026)

# ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

உயிரியல்

## A/L 2000

- உயிரின் தொடர்ச்சி (பிறப்புரிமையியல்)
- பிரயோக உயிரியல்

திரு. கெங்காதரன்

புதன், வியாழன் 3.30 P.M

ஆரம்பம்: 01-12-1999 (புதன்)

(71372)

நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை 2000 ஆம் ஆண்டிற்கான உறுப்புரிமை கோரல்

மேற்படி கோயிலுக்கு 2000 ஆம் ஆண்டிற்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை ''பொருளாளர்'' ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற முகவரிக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று, விண்ணப்பத்துடன் சேர்த்து 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31-12-1999) மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகச் ''செயலாளர்'' ''ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு'' என்ற முகவரி இட்டு கடித மூலம் அனுப்புமாறும் அல்லது கோயில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் 2000 எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் பெற விரும்புவோர் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,

அறங்காவலர் சபை,

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

நயினாதீவு.
31-11-99

(71284)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சரஸ்வதி மகாரத்தினம்

மலர்வு 1929 - 05 - 06 உதிர்வு 1998 - 12 - 12

ஓராண்டு நினைவினிலே
உங்கள் அன்பு
நினைவுகளை ஒவ்வொன்றாய்
நினைக்கின்றோம் நாம்.........
பேரோடும் புகழோடும் வாழ்ந்து
எம்மைப்
பெரிதுவந்து பேணியதோர்
அன்புத் தெய்வம் என்றும்
நீரோடும் கண்களுடன்
நினைப்போம் உன்னை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(சி/10022)

# எட்னா சொக்லட் ஸ்ரிக்கர்

## இலவச கிரிக்கற் மட்டை (Bat)

75-100 அல்லது 100-125 இலக்கத்தினை உடைய ஸ்ரிக்கர் ஒப்படைத்தவர்கள் உடன் தொடர்பு கொள்க.

EDNA Distributors,
558, Hospital Road, — Jaffna.

(71381)

புத்தாயிரமாம் ஆண்டின் புதுப்பொலிவுடன்

# மது கல்வி நிறுவனம்

டச்சுவீதி, — கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

கல்வி ஆண்டு 2000த்திற்கான அனுமதிகள்

தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள்,

ஆரம்பம்: 02-12-1999

(71353) — நிர்வாகி

உரும்பிராய், ஊரெழு

# விவசாய உற்பத்தி, நுகர்ச்சிச் சேவை கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

01. களஞ்சியப் பொறுப்பாளர்: வெற்றிடம் 01
02. விற்பனை உதவியாளர் வெற்றிடம் 01

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 1999-12-15

மேலதிக விவரங்களுக்கு சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:

சங்க எல்லைப் பரப்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமைஅளிக்கப்படும்.

இ. நடராசா
தலைவர்

இல. 50, பலாலி வீதி,
உரும்பிராய்.

(71375)

# பகுதிநேர விரிவுரையாளர் பதவி

யாழ்ப்பாணம், தொழில் நுட்பக் கல்லூரியின் 2000 ஆம் கல்வி ஆண்டுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன பாட விவரங்களையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியிலுள்ள தொழில் நுட்ப விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.


முடிவு திகதி: 15-12-99

— அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10023)

# 32 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 - 03 - 1952 | 30 - 10 - 1999 |

## அமரர் றொபேட் தேவகிருபை சாமுவேல் (கிருபா)

மீண்டும் மறுமையில் சந்திக்கும் வரை
மகனே! கண்ணீரில் வருந்தும்

உன் மம்மி
உற்றார், உறவினர்.

திருமதி ஜே. ஜே. சாமுவேல்
71, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(71370)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சுப்பொருள் அருந்துவோர் விவரம்

## சுகாதாரப் பணிப்பாளர் சேகரிப்பு

திருநெல்வேலி, நவ 30

நஞ்சுப்பொருள்களை அருந்திய நிலையில் அரசினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வருபவர்களின் விவரங்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை பற்றிய விவரங்களையும் தமது அலுவலகத்திற்கு மாதாந்தம் அனுப்பி வைக்குமாறு, கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நாடெங்கிலுமுள்ள பிரதி மாகாணப் பணிப்பாளர்களையும், மாகாணசுகாதார சேவை பணிப்பாளர்களையும் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் அருந்திய நஞ்சுப் பொருள்கள், அவற்றுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் ஆகியன தொடர்பான கல்வி ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக இந்த விவரங்கள் தேவைப்படுவதாகவும் —

இது பற்றிய மாதாந்த அறிக்கையைத் தயாரித்து அனுப்புமாறும் —

இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளின் பொறுப்பதிகாரிகள் தங்கள் வைத்தியசாலையில் நஞ்சு அருந்திய நிலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பற்றிய விவரங்கள், நோயாளர் உட்கொண்ட நஞ்சு பற்றிய விவரம், சிகிச்சை வழங்கப்பட்ட விவரம், இறந்தவர்கள் விவரம் ஆகியனவற்றை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-8-135)

## போக்குவரத்துத் தடையால் மன்னாரில் விலைகள் உயர்வு

வவுனியா, நவ. 30

மன்னார் பெரு நிலப்பரப்புடனான போக்குவரத்துகள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருப்பதால் மன்னாரில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மரக்கறி வகைகள் கிலோ 80 ரூபா வரையிலும் தேங்காய் 17 ரூபாவுக்கும் ஒரு பிடி கறிமுருங்கையிலை 15 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிமாவட்டங்களிலிருந்து மன்னாருக்கான போக்குவரத்துக்கள்சீராகாது விட்டால் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-5-164)

## பன்றியின் தாக்குதலுக்கு இரு இளைஞர் காயம்

தென்மராட்சி, நவ. 30

வேட்டைக்குச் சென்றோரால் துரத்தப்பட்ட பன்றி துரத்திய ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தியபின்னர் காணியில் மாடுகட்டச் சென்ற இளைஞர் ஒருவரையும்காயப்படுத்திய சம்பவம் கடந்த வாரம் மட்டுவில் தெற்கில் இடம் பெற்றது.

பன்றியைத் துரத்திச் சென்ற மட்டுவில் வடக்கு சந்திபுரத்தைச் சேர்ந்த கே. குகதாஸ் (வயது 25) என்பவரும், மாடுகட்டச் சென்ற சி. சிவனேஸ்வரன் (வயது22) என்பவருமே காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் குகதாஸ் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த வாரம் மந்துவில் பகுதியில் பன்றியினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த சா. தனீஸ்வரன் (வயது 35) வி. நகுலேஸ்வரி (வயது 32) ஆகியோரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஐ-8-117)

## திறந்தவெளிக்கலையரங்கு மூளாயில் அமைக்கப்படும்

மூளாய், நவ. 30

மூளாயில் ஜேர்மன்தொழில் நுட்பக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் திறந்தவெளிக் கலையரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொது வைபவங்களை நடத்துவதற்கேற்ற வகையில் இக் கலையரங்கு அமைக்கப்படவுள்ளது.

மூளாய்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள பழைய கலையரங்கை அடிப்படையாக வைத்து இப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. கட்டடப்பொருள்களை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது [௧-99]

### குருநகர்ச் சந்தை

## குறைந்ததொகைக்குக்குத்தகை எடுக்கவியாபாரிகள் கோரிக்கை

குருநகர், நவ. 30

குருநகர் பொதுச் சந்தையில் வியாபாரம் வீழ்ச்சியடைந்து வருவதனால் 2000 ஆம்ஆண்டில் இச்சந்தையைக் குத்தகைக்குஎடுத்துவியாபாரிகளிடமிருந்து வரியை அறவிடவுள்ளோர் வியாபாரிகளினதும். பொதுமக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு மிகக் குறைவான தொகைக்கு இச்சந்தையைக் குத்தகைக்கு எடுக்குமாறு குருநகர் வர்த்தகர் சங்கம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் இச் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தோர் மிகவும் அதிக தொகைக்குக் குத்தகைக்குஎடுத்ததனால்வியாபாரிகளிடம்இருந்து மிகஉயர்ந்த தொகையை நாளாந்த வரியாக அறவீடு செய்து வருவதாகவும்—

இதனால் வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளார்கள் எனவும்—

அவர்கள் தமது சங்கத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளதாகக் குருநகர் வர்த்தகர் சங்க வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

எதிர்வரும் ஆண்டிலிருந்து 25 ரூபா வரிப்பணம்செலுத்துபவர்களின் வரி அறவீட்டை 15 ரூபாவாகவும்—

20 ரூபா வரிப்பணம் செலுத்துபவர்களிடம் 10 ரூபாவையும் —

10 ரூபா வரிப்பணம் செலுத்துபவர்களிடமிருந்து 5 ரூபாவையும்—

அறவிடத்தக்க வகையில் வரி செலுத்த முடிவு செய்திருப்பதாகவும்—

அதே வட்டாரங்கள் தெரிவித்தன .

(ஐ-8-51)

## குளியாப்பிட்டியில் குண்டுகள் வெடிப்பு

கொழும்பு, நவ. 30

குளியாப்பிட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நண்பகல் 12. 30 மணியளவில் தொடர்ந்து மூன்று குண்டுகள் வெடித்தன.

இப்பகுதியிலுள்ள ரெலிக்கொம் கபினெட்டில் இரண்டு குண்டுகளும் மின்மாற்றியில் ஒரு குண்டும் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பில் ஏற்பட்ட சேத விவரம் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

(இ-5-6)

## நெடுந்தீவில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நெடுந்தீவு, நவ. 30

நெடுந்தீவில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளை சுகாதார பரிசோதகர் மேற்கொண்டுள்ளார்.

பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

[இ-111]

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

காரைநகர் நவ. 30

ஊர்காவற்றுறை பிரதேச பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

(இ-73)

## இளைஞர் கழகங்கள்

காரைநகர், நவ. 30

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்து இளைஞர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சங்கொலி, இளந்தென்றல், முல்லை, சங்கமம், சுடரொலி கலைத்தென்றல் உதயகீதம், காந்திமதி, தமிழ்நாதம், ஒளிச்சுடர் ஆகியவையே இந்த இளைஞர் கழகங்கள் ஆகும்.

இந்த இளைஞர் கழகங்கள் ஒவ்வொன்றும் தத்தமது பகுதிகளில் மரக்கன்றுகளை நடும் பணியில் ஈடுபட்டுள்ளன என்றும்—

இக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-73)

# செய்திக் கொத்து

### சுய தொழில் முயற்சிக் கடன்

கொழும்புத்துறை, நவ 30

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி மூலம் சுயதொழில் முயற்சிக்கடனாக பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்க எல்லைக்குள் வசிக்கும் சங்க அங்கத்தவர்களுக்கே இந்தக்கடன் வழங்கப்படவுள்ளது.

[க-30]

### கூரைத் தகடுகள் வழங்கல்

தென்மராட்சி, நவ. 30

வன்செயல் காரணமாக வீடுகளை இழந்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நூறு பயனாளிகளுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் கூரைத் தகடுகளை (அஸ்பெஸ்டஸ் சீற்) அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

ஒரு பயனாளிக்கு பதினொரு கூரைத் தகடுகள் வீதம் வழங்குவதற்காகபிரதேச செயலகத்திடம் இக் கூரைத்தகடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன

### நியமனம் வழங்கும் நிகழ்வு

வளலாய், நவ. 30

கிராமங்கள் தோறும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை நியமிக்கும் திட்டத்தில் கோப்பாய் உதவி அரசாங்கஅதிபர்பிரிவில்தெரிவு செய்யப்பட்ட பதினொரு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்ச்சி கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் உதவி அரசஅதிபர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

ஈ.பி.டி.பி. யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ரவி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனங்களை வழங்கினார்.

(க-178)

### மாடிக் கட்டடம் திருத்தம்

கொக்குவில், நவ. 30

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் சூறாவளியினால் சேதமுற்ற மாடிக் கட்டடத் திருத்த வேலைகள் முடிவடைந்து வருகின்றன. இந்தத் திருத்தப் பணிக்கென நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கல்வித் திணைக்களத்தின் நிதி உதவி மூலம் இந்தப் பாடசாலையில் தரம் ஒன்றுக்கான செயற்பாட்டறையும் அமைக்கப்படஉள்ளது.

[க-69]

### குழாய்க் கிணறு அமைப்பு

நாவற்குழி, நவ. 30

தனங்கிளப்பு பகுதியின் பனங்காய் குள பிள்ளையார் கோயிலடி அறுகுவெளி பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்கு அண்மையில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு மூலம் நன்னீர் பெறப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தத் திட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலர் நிதி ஒதுக்கீட்டினைச் செய்துள்ளார்.

(க-102)

### துப்புரவுப் பணி

வளலாய், நவ.30

வளலாய்ப் பொது சந்தையைத்துப்புரவு செய்யும் பணியில் பிரதேச சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐ நா உதவித் திட்டத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்தச் சந்தை பல வருடகாலமாக பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடப்படாமையால் பற்றைகளாலும் செடிகளாலும் மூடப்பட்டுள்ளது.

(க-178)

### சங்கக்கிளைகள் ஊடாக மண்எண்ணெய்

சண்டிலிப்பாய், நவ. 30

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மானிப்பாயில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த இருவாரகாலமாக மண்எண்ணெய் விநியோகம் நடைபெறாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கக் கிளைகள் ஊடாக மக்களுக்கு மண்எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் —

இதனால் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் மண்எண்ணெய் விற்பனை நடைபெறவில்லை என்றும் —

தெரிவிக்கப்பட்டது.

(க-135)

### மருந்தகம் இடமாற்றம்

சண்டிலிப்பாய், நவ 30

நீண்டகாலமாக வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திக்கண்மையிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம் வட்டுக்கோட்டை — மாவடி சந்திக்கு அண்மையில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை கோட்டைக்காடு அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியான டாக்டர் எஸ். சதாசிவம் பிற்பகல் வேளையில் இந்த மருந்தகத்திற்கு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார். இந்த மருந்தகத்திற்கு நிரந்தர டாக்டர் இதுவரை நியமிக்கப்படவில்லை.

(க-135)

### சாயி பிறந்த தின நிகழ்வு

சுண்டுக்குளியில் உள்ள சாயிநிலையத்தில் பகவான் சாயி பாபாவின் பிறந்ததின விழா யாழ் முன்னாள் மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

'பகவானின் அற்புத லீலை' படக்காட்சி பஜனை வஸ்திரம் வழங்கல், அர்ச்சனை ஆகிய நிகழ்வுகளும் அன்று நடைபெற்றன.

(க-30)

### பாம்பு தீண்டியது

வயற் காணியில் பயற்றங்காய் பிடுங்கிக் கொண்டிருந்தவிவசாயியை பாம்பு கடித்த சம்பவம் அராலி மேற்கு கோட்டைக்காடு என்ற இடத்தில் இடம் பெற்றது.

அம்பலவாணர் சுந்தரேசன் என்பவரே பாம்பு தீண்டி யாழ். அரசினர் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(க-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகின்றோம்

## டாக்டர் சு. சி. அருளானந்தம்

அவர்கள்
சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு
வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றின்
கடந்த காலத் தலைவரும்
மன்றின் செயற்குழு உறுப்பினருமான

டாக்டர் சு. சி. அருளானந்தம் அவர்களை
1999 – 11 – 30 ஆம் திகதி
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்
பி. ப. 3.00 மணிக்கு வணிகர்கள் பாராட்டுகின்றோம்.

சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம்

(சி/10009)

# வாழ்த்துகின்றோம்

அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம்
பெற்ற கோண்டாவில் மஹா கணபதிப்பிள்ளையார்
ஆலய பிரதம குரு

''சிவாகம கிரியா பூஷணம்''

## சிவஸ்ரீ சாமி. சிறீஸ்கந்தராஜக்குருக்கள்

அவர்களையும்
எமது அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினரான

## பிரம்மஸ்ரீ கு. பஞ்சாட்சரசர்மா

ஆசிரியர் உரும்பிராய் சந்ரோதயா மகாவித்தியாலயம்
அவர்களையும்

வாழ்த்தி ''மக்கள் சேவையே மகேசன் சேவை''
என்ற கருத்துக்கமையச் சேவை புரிய வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்,
இல. 74, பிறவுண் வீதி,
நீராவியடி.

(71363)

# யா/ இராமநாதன் கல்லூரி
# நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் 1999

காலம்: 30 – 11 – 99 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 1.00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

தலைவர்: திருமதி ஆ. சிவஞானசுந்தரம்
அதிபர்

பிரதம விருந்தினர்: திரு. ஈ. ஏகநாதன்
(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)

ஆசியுரை: கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்
(தலைவர் புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: திரு. அ. தற்பரானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)

பரிசில் வழங்கல்: திருமதி சகுந்தலா ஏகநாதன்

விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

விளம்பர அன்பளிப்பு:

## கௌரி

தொலைத் தொடர்பு சேவை
போட்டோப்பிரதி, லெமனேற்றிங்
இரவு பகல் சேவை
கே. கே. எஸ். வீதி. மருதனார்மடம்.

உள்ளூர் பக்ஸ் } 070 = 212427
வெளியூர்: பக்ஸ் } 0094 = 70 - 212427

## கபிலன்

தொலைத் தொடர்பு சேவை
றொட்டியாலடி
கே. கே. எஸ். றோட், மருதனார்மடம்.
இரவு பகல் சேவை
உள்ளூர்: 070 = 212718
வெளியூர்: 0094 = 70 - 212718

(சி/10010)

# தீவுப் பகுதிக்கு சமுர்த்தி அலுவலர்

வேலணை, நவ. 30

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை கிராமிய அபிவிருத்தி அமைச்சின் தீர்மானத்திற்கமைய கிராமங்கள் தோறும் சமுர்த்தி இயக்கத்தினைச் செயற்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் சமுர்த்தி உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் தீவுப் பகுதி தெற்குபிரதேசசெயலர் பிரிவில் புதிதாகஆறுசமுர்த்தி உதவியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் சென்ற வாரம் பிரதேச செயலகத்தில் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தியால் சம்பிரதாய பூர்வமாக வழங்கப்பட்டன.

சமுர்த்தி நியமனம் கிடைத்தவர்களின் பெயர் விவரம் வருமாறு;-

செல்வி ஜெகசோதி கலைவாணி (6 ஆம் வட்டாரம் மண்டைதீவு), செல்வி குணநாயகம் உமாதேவி (5 ஆம் வட்டாரம், மண்கும்பான்), செல்வி நாகமுத்தன் சூரியகலா (3 ஆம் வட்டாரம், வேலணை), செல்வி சூரியகுமார் சாரதாதேவி(12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு), செல்வன் இரத்தினசபாபதி இத்தினபாலன் (2 ஆம் வட்டாரம், வேலணை), செல்வி ஞானப்பிரகாசம் எட்விஷா [2 ஆம் வட்டாரம். அல்லைப்பிட்டி]. (ஐ-167)

# நகரசபை தொலைபேசிச் சேவை

வடமராட்சி, நவ. 30

பருத்தித்துறை நகரசபை, உள்ளூர் வெளிநாட்டு தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துள்ளது.இதற்கென தனியான தொலைபேசி இணைப்பு பெறப்பட்டு, சபையின் அலுவலகத்தில் வைத்து இச் சேவை நடத்தப் பட்டு வருகிறது. (ஐ-173)

# முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி

அரியாலை, நவ. 30

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் நடத்தும் ஆண்,பெண் இருபாலாருக்குமான முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ். பிரதேச செயலர் செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராக விழாவில் கலந்து கொள்வார்.

தொடர்ந்து பரிசளிப்பு விழா இடம்பெறும். [இ-17]

## பாலர் ஆசிரியராக

க. பொ. த. (சா/த)
கடைசித் தகைமை
ஆறு மாதத்தில் தபால்
வழியில் பயிற்சி.
விவரங்களுக்கு:
பாலர் ஆசிரியர்
சங்கம்,
கொக்குவில்.
(71106)

## தமிழ் A/L

மிலேனியத்து
மீட்டலுக்கு முன்
விடுமுறைக்கான தனித்துவ
வகுப்புகள்
(01 – 12 – 1999 முதல்)
by. N. தமிழிந்திரன்
யாழ். நகர். சாவகச்சேரி.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சிரேஷ்மணி இளையதம்பி குமாரசுவாமி J.P.

( இளைப்பாறிய ஆசிரியர் )

தோற்றம் 07-04-1921 மறைவு 22-11-1997

திதி: 30-11-1999

எம்மை வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழி வகுத்த எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஈராண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சை
விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கமல வாசா,
ஆனைக்கோட்டை.

(71330)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
# கண்ணீர்ப் பூக்கள்

அன்னையின் மடியில
20 – 07 – 1984



ஆண்டவன் அடியில்
30 – 11 – 1989

செல்வி

## சித்திரகலா அமரசேனாபதி

திதி: 30 – 11 – 1999

எம் இனிய சித்திரமே
சித்திரகலா! — நீ
கொஞ்சிப் பேசி மழலை கேட்க – உன்
உயிர் ஓவியத்தின் முன்நின்று
வரம் வேண்டி இன்று பத்து ஆண்டுகள் ஆகுதம்மா
84 ல் வந்துதித்த எம்
இனிய மகனே! உடன்பிறப்பே!
சிரித்தாய் நடந்தாய்
பாடினாய் ஆடினாய்
89 இல் எங்கேயம்மா போனாய்?
உனைக் காணாமல் ஆண்டுகள்
பத்தாக ஓடுதம்மா
அதில் நீந்தி வந்து
காட்சி எமக்கு தாருமம்மா

உமது பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, ஆசை அண்ணா (வசி),
பெரியப்பா, மாமி குடும்பம்
மற்றும் உற்றார், உறவினர்.

சுதா பவனம்,
மயிலியதனை,
தொண்டமானாறு.

(71357)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சர்வமத மாநாட்டின் நல்ல யோசனை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதி தர வேண்டும். அதற்கான வழி முறைகள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றை நிறைவேற்றவும் முன்வர வேண்டும்.

இவ்வாறு சர்வமத மாநாட்டில் வைத்துக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக ஆராய்ந்து வேட்பாளர்களிடம் சில கோரிக்கைகளை முன்வைப்பது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை சர்வமதத் தலைவர்கள் கூடினர்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பிரஸ்தாப மாநாட்டில் அரசியல் கட்சி நலனுக்கன்றி நாட்டு நலன் கருதி வேட்பாளர்கள் சில வாக்குறுதிகளை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. போட்டியிடும் சகல வேட்பாளர்களிடமும் அவற்றைக் கோரிக்கைகளாக முன் வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இன்று நாட்டின் முதலாம் இலக்கப் பிரச்சினையாக விளங்குவது போரே ஆகும்; போரினால் அருமந்த மனித உயிர்கள் பலியாகின்றன. மக்களின் உடைமைகள் அழிகின்றன. தேசத்தின் சொத்துகள் நிர்மூலமாகின்றன. அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரம் நலிவடைகின்றது. தமிழ் மக்கள் சுதந்திரமான, இயல்பான, பதற்றமற்ற சூழ் நிலையில் வாழ முடியவில்லை. இன்னல்களையும் வேதனைகளையும் தொடர்ந்து அனுபவிக்க நேர்ந்துள்ளது. தங்கள் சொந்த இடங்களில் வாழ முடியாது இடத்துக்கு இடம் பெயர்ந்து விரக்தியின் விளிம்பில் அவர்கள் நிற்கிறார்கள்.

இப்போதெல்லாம் போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரையும்விட, பொதுமக்களே, ஒன்றும் அறியாத அப்பாவிகளே ஆயுதம் ஏந்தாத நிராயுதபாணிகளே, உயிரைக் காப்பாற்றத் தஞ்சம் கோருவோரே அதிக எண்ணிக்கையில் மடிய நேரிடுகிறது; கொல்லப்படுகிறார்கள்.

போர் உடனடியாக நிறுத்தப்பட்டாலே மேற்கொண்டு அனர்த்தங்களும் அழிவுகளும் அவலங்களும் இழப்புகளும் உண்டாகாமல் தவிர்க்க முடியும். இனப்பிரச்சினையே போருக்கு மூல காரணம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சமாதான— அரசியல் — பேச்சுவார்த்தை அவசியம்.

அத்தகைய பேச்சுவார்த்தை போர் நிறுத்தத்தின் பின்னர் நடைபெறுவதே உகந்தது. ஆனால் பதவியில் உள்ள அரசாங்கம் போர் நடைபெறும் போதே பேசுவதற்கு முயற்சிக்கிறது. இது குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால் போர் நிறுத்தம் செய்து கொண்ட பின்னரே பேசமுடியும் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஆகையால், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி போரை உடனடியாக நிறுத்துவதாக அதில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் வாக்குறுதி வாங்குவது என்பது நல்ல யோசனை.

அவர்கள் எல்லோரையும் அதனைக் கைக்கொள்ளச் செய்வதற்கு ஒரு வழி உண்டு. போரை நிறுத்துவதனையும் (உரிய விவரங்களுடன்) ஒரு தேர்தல் கொள்கையாக அறிவிக்காத எவருக்கும் வாக்களிப்பதில்லை என்ற முடிவுக்கு மக்கள் வரவேண்டும்.

ஆகையால் வேட்பாளர்கள் மட்டுமன்றி வாக்காளர்களையும் இதில் ஈடுபடுத்தத் தூண்டுவது மிக அவசியம்.

# விசேட அ. அட்டைகளைப்பெறுவதில் இருந்து வரும் நடைமுறை சிக்கல்கள்

யாழ். குடாநாட்டில் வசிக்கும் மக்களுள் பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விசேட அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டும். இந்த நிபந்தனைக்கு ஏற்ப குடாநாட்டில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற லட்சக்கணக்கானோரிடம் விசேட அடையாள அட்டைகள் இருக்கின்றன.

ஆரம்பத்தில் விசேட அடையாள அட்டைகள் மக்களுக்குத் துரிதமாக விநியோகிக்கப்பட்டன. இடம்பெயர்ந்து சென்ற மக்கள் குடாநாட்டுக்குத் திரும்பிவந்து மீளக்குடியமர்ந்து நான்கு, ஐந்து வாரங்களுக்குள் விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

விசேட அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு மட்டும் யாழ். செயலகத்தில் தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இந்தப் பிரிவுக்குக் கருத்திட்ட முகாமையாளராக ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அனுபவம் மிக்கவரான ரி. திருலிங்கநாதன் நியமனம் செய்யப்பட்டார். இவரின் வழிகாட்டலில் துரிதகதியில் விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்கள், பாடசாலைகள், யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றினூடாகப் பத்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் விநியோகிக்கப் பட்டன.

**செய்தி மடல்**

### புதிய நடைமுறை

யாழ். மாவட்ட சிவில் சேவை அதிகாரி விசேட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கின்றவர்களுக்குப் பாதுகாப்புப் படையினரின் சான்றுப் பத்திரம் வழங்கப்பட்ட பின்னரே விநியோகிக்கப்படவேண்டும் என்ற கட்டுப்பாட்டை 23-06-1999 இல் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இந்த நடைமுறையின்படி கிராம உத்தியோகத்தர்மூலம் விசேட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் முதலில் கிராம உத்தியோகத்தர்களினால் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கப்படும் பிரதேசசெயலரின் சிபார்சுக்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் அந்த அந்தப் பிரிவிலுள்ள இராணுவ முகாம்களிலுள்ள சிவில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும். இந்த அலுவலகங்களில் படிவங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இராணுவ சிவில் அதிகாரிகள் பிரிவுக்குப்பிரிவு ஒவ்வொரு விதமாக விண்ணப்பதாரிகளிடம் நடந்து கொள்கின்றனர். ஒரே விதமான நடைமுறையைக் காண முடியாது. சில இடங்களில் நான்கு ஐந்து மாதங்களுக்குப்பின்னர் விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் ஒப்படைக்கப்படும். விண்ணப்பப்படிவம் உட்படப் படிவத்துடன் இணைக்கப் பட்டுள்ள ஆவணங்களையும் சேர்த்து நிழற்பிரதிகள் எடுத்துக் கொண்டு வருமாறு இராணுவ அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை பணிக்கின்றனர்.

**த. கதிர்காமநாதன்**
வலிமேற்கு செய்தியாளர்

நிழற் பிரதிகளுடன் விண்ணப்பதாரிகள் சென்றவுடன் படிவம் ஒன்றும் பூரணப் படுத்தப்படும். பின்னர் தலைமை அலுவலகத்துக்கு சகலவற்றையும் அனுப்புகின்றனர். யாழ். மாவட்ட இராணுவ தலைமை அலுவலகத்தில் இருந்தே விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலக நுண்கருத்திட்ட முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன இந்த

(9 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கான திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறை

அரசாங்க ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழுச் செயலாளர் 865/3 ஆம் இலக்க 03.04.95 ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானி மூலம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புகளை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1/99 ஆம் இலக்க, 30.09.99 ஆம் திகதிய சுற்று நிருபத்தின் மூலம் திருத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றுக்கு அமைவாக, இலங்கை ஆசிரிய சேவையுள் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட வகுப்பு/ தரத்திற்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் உச்ச நிலையை அடைந்துள்ள ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகளை விதிகளுக்கமைய வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இப்புதிய ஆசிரியர் பதவி உயர்வுக்கான விதிமுறைகள் பற்றி ஆசிரியர்கள் மத்தியில் விளக்கமின்மை நிலவுகின்றது. அதனால் வலிகாமம் கல்விவலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட விளக்கக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை தொகுத்து ஆசிரியர்கள் நலன்கருதி அவர்களின் கவனத்துக்கு இங்கு தருகிறோம்.

★ 31.12.2000 ஆம் திகதி வரை மட்டுமே இவ்விதிகளுக்கமைய பதவி உயர்வுகள் வழங்கப்பட முடியும் என்பதை முதலில் சகல ஆசிரியர்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

புதிய திருத்தங்களுக்கமைய பதவி உயர்வுபெற இருக்க வேண்டிய தகுதிகள் விவரம் பின்வருமாறு:

1) இ. ஆ. சேவை தரம் 3- II இல் இருந்து 3- I பதவி உயர்வு-

அ) 3- II ஆம் தரத்திற்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும்

தொகுப்பு:
**வி. பி. சர்மா**

ஆ) 3 – II தரத்துக்கான சேவையில் 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

2) இ. ஆ. சேவை தரம் 3-I இல் இருந்து தரம் 2-II க்கு பதவி உயர்வு.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட டிப்ளோமா தாரிகள், தொழிற்றகைமையற்ற பட்டதாரிகள் ஆகியோருக்கானது

அ) 3– I ஆம் தரத்துக்கான சம்பள அளவுத்திட்டத்தின் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) 3 ஆம் வகுப்புக்கான சேவைக்காலத்தில் 5 புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்.

இ) கஷ்டப் பிரதேச பாடசாலையொன்றில் குறைந்தது 3 வருட சேவை.

3) இ. ஆ. சேவை தரம் 2– II இல் இருந்து தரம் 2–I க்கு பதவி உயர்வு.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட டிப்ளோமா தாரிகள், தொழிற்றகைமை பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கானது —

அ) 2-ii ஆம் தரத்திற்கான சம்பள அளவுத்திட்டத்தின் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) 2-ii ஆம் தரத்தில் சேவைக்காலத்தில் 10 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ) கஷ்ட பிரதேச பாடசாலை ஒன்றில் குறைந்தது 3 வருட சேவை.

தொழிற் தகைமையற்ற பட்டதாரிகள்

அ) 2-ii ஆம் தரத்துக்கான சம்பள அளவுத் திட்டத்தின் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி ஒன்றினை சிறப்பாக பயின்று பூர்த்தி செய்திருத்தல்.

இ) கஷ்ட பிரதேச பாடசாலை ஒன்றில் குறைந்தது 3 வருடங்கள் சேவை.

4) இ. ஆ. சேவை தரம் 2–i இல் இருந்து 1 ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட டிப்ளோமா தாரிகள், தொழிற்றகைமை பெற்ற பட்டதாரிகளுக்கானது.

அ) 2–i ஆம் தரத்துக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) 50 வயதினைத் தாண்டி இருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட தகுதிகளில் ஒன்று இல்லாவிடினும் அவர்கள் அடுத்த தரத்திற்கு பதவி உயர்வு பெற முடியாது.

கஷ்டப் பாடசாலை என்பது நிலையியற் குழுவினால் கஷ்ட பிரதேச பாடசாலை என தீர்மானிக்கப்படுகின்ற பாடசாலை. ( கஷ்ட பிரதேச பாடசாலைக்கான 10 வீத அல்லது 15 வீத சம்பள படிகளைப் பெற்றவர்கள் )

### புள்ளி வழங்கப்படும் முறை

1. பயிற்றப்படாத நிரந்தர ஆசிரியர் சேவைக் காலம்—இரண்டு ஆண்டுக்கு ஒரு புள்ளி.
2. ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த சேவைக்காலம் — இரண்டு ஆண்டுக்கு ஒரு புள்ளி.
3. பயிற்றப்பட்ட ஆசிரியர் சேவை —ஒரு ஆண்டிற்குஒரு புள்ளி.
4. பட்டதாரி ஆசிரியர் சேவை—ஒரு ஆண்டுக்கு ஒரு புள்ளி.
5. பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர் சேவை ஒரு ஆண்டுக்கு ஒரு புள்ளி.
6. பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறியில் தேர்ச்சி அடைந்தால் ஒரு முறையில் மாத்திரம் கணக்கிடக் கூடிய புள்ளி — ஒரு புள்ளி.
7. 3 — I தரத்தைச் சேர்ந்தவர்கள் 966/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி 2 வாசகம் 4 இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தால் — 3 புள்ளிகள்.
8. 2 — II தரத்தைச் சேர்ந்தவர்கள் 966/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி II வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தால் — 5 புள்ளிகள்.

★

## நாளை

கார்த்திகை 15
புதன்கிழமை
திதி: நவமி
முன் இரவு 9.49 வரை.
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 10. 24 வரை.
சுபநேரம்: 4.44—6.14
ராகுகாலம்: 12.14—1.44
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயனுக்கு**

அறியாமையைக்காட்டிலும் இழிவான அடிமைத்தனம் [illegible]
— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத் தேவாலய அனர்த்தம் குறித்து பாப்பரசருக்கு மறைமாவட்டம் மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மறை மாவட்ட மக்களால் மிகவும் நேசித்துப் போற்றப்படும் ஆலயமாகிய மடுத் திருத்தலம் மீது கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் போது 42 பொது மக்கள் பலியாகியும் 54 பேர் காயமுற்றும் உள்ளனர். 450 ஆண்டு பழமை வாய்ந்த சிற்றாலயம் சிதறுண்டு போன செய்தியையும் அதனால் நாங்கள் அடைந்த பேரதிர்ச்சியையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

மடுத் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று முன்தினம் யாழ். மரியன்னை பேராலயத்தில் நடத்தப்பட்ட பிரார்த்தனை நிகழ்வின் போது பரிசுத்த தந்தை, புனித பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பருக்கு முகவரியிடப்பட்டு யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட மக்களால் அனுப்பப்பட்ட மகஜரில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது! —

எங்களுக்கு புனித மடுத் திருப்பதி மிகவும் பழைமை வாய்ந்ததும் சமய, சரித்திர மகிமையுடையதுமான ஒன்று என்பது புனித தந்தையாகிய தாங்கள் அறிந்ததே. தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் மடு அன்னையின் திருவிழாவைத் தமக்கு அண்மையிலுள்ள ஆலயங்களில் கொண்டாடத் தவறுவதே இல்லை. சகல சமயங்களையும் சேர்ந்த பக்தர்கள் மடு அன்னையின் திருவிழாக் காலத்தில் அன்னையின் ஆசீர்வாதம் பெறவும் தமது வேண்டுதல்கள் நிறைவேறவும் மடுவில் குழுமி நிற்பது வழக்கம்.

மடுத்திருப்பதியின் பரிபாலகர், மன்னார் ஆயர் இருவரும், மடுப் பிரசேதத்தை அமைதிப் பிரதேசமாக மதித்து விலகி இருக்கும்படி பலமுறை கோரிய போதிலும் அவ்வேண்டுதல் நிராகரிக்கப்பட்டது துரதிர்ஷ்டமானதே. எங்கள் சமய ஆசார வாழ்வில் மிக உன்னதமான இடத்தை வகிக்கும் மடுத்திருப்பதியின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தின் புனிதத் தன்மை சில மாதங்களுக்கு முன்னர் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி நிலைகொண்ட போது மாசுபடுத்தப்பட்டது. உரியவர்களின் வேண்டுகோள்கள் முழுமையாக அலட்சியம் செய்யப்பட்டமை இன்று இத்தகைய மிகப் பெரிய மனித உயிர்களின் அழிவின் உச்சிக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இத்தகைய ஒரு தாக்குதல் வழிபாட்டுத்தலங்களின் மேல் நடத்தப்பட்ட முதல் தாக்குதல் அல்ல. கடந்த காலத்திலும் இதேபோன்ற குண்டு வீச்சுகளும் ஷெல் தாக்குதல்களும் வழிபாட்டுத் தலங்களின் மேல் இடம்பெற்றுள்ளன.

இலங்கை ஆயர் அவையானது, சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மடுத் திருப்பதியை ஒரு யுத்தசூனியப் பிரதேசமாகக் கடைப்பிடிக்கும்படி பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்கராகிய நாம் இத்தகைய மனிதப்படுகொலையை மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது. எனவே அதி உயர் மேன்மைக்குரிய புனித தந்தையாகிய தாங்கள், இத்தகைய அத்துமீறல்கள் இனி ஒருபோதும் நடவாதிருக்கத் தங்கள் மேன்மையான அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் உடனடியாகப் போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் வடக்கு — கிழக்கின் சொல்லொண்ணாத் துன்பத்திற்கும், வேதனைகள் இழப்புக்களுக்கும் காரணமான இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம் — என்றுள்ளது.

(இ-9)

# வரி அறவிடல், நிறைகழிவு குறித்து விவசாயிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், நவ. 30

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறிகளுக்கான வரி அறவிடுதல், அவற்றின் நிறை கழிவு போன்ற நடைமுறைகள் பற்றி விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

95ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்பு 100 ரூபாவுக்கு 3 ரூபா வரியாக அறவிடப்பட்டு வந்தது. உரப்பைக்கான கழிவாக 2 கிலோவும் சாக்கொன்றுக்கான கழிவாக 4 கிலோவும் கழிக்கப்பட்டு வந்தது.

தற்பொழுது மீளக்குடியமர்ந்த பின்பு மேற்குறிப்பிட்ட கழிவுக்கான நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. அதாவது 10 கிலோவுக்கு 1 கிலோ என்ற புதிய நடைமுறை வியாபாரிகளால் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்தநடைமுறையானது மண்ணுடன் உள்ள மரவள்ளி, கரணை போன்றவற்றுக்கு ஏற்புடையதாக இருந்தாலும் ஏனைய மரக்கறிகளுக்கு ஏற்றதல்ல என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சகல மரக்கறிகளுக்கும் உரப்பைக்கு 2 கிலோவும் சாக்குக்கு 4 கிலோவும் கழிவாக இருக்கவேண்டுமென விவசாயிகளின் சார்பில் வலி. கிழக்கு விவசாய சம்மேளனத்தின் ஒன்றியத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். புதிய ஆண்டில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# சாதாரணதரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 30

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப்பரீட்சைக்குரிய வினாத்தாள்களில் முதல்தொகுதி நாளை மறுதினம் எடுத்துவரப்படவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என யாழ். கல்வி வலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பரீட்சை நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் தீவகம், யாழ். வலயங்களுக்கு நாளை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் —

தென்மராட்சி வலயம் மற்றும் பளைப் பிரிவினருக்கு நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேடறிபேர்க்கல்லூரியிலும் — நடைபெறவிருக்கின்றது. (இ-3)

# அரசும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக்கோரிக்கை

கொழும்பு, நவ. 30

விடுதலைப்புலிகளின் நல்லெண்ணத்துக்கு கைமாறாக அரசாங்கம் தடுத்து வைத்திருக்கும் புலிகள் இயக்க சந்தேக நபர்களை விடுவித்து தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கடமையின் போது காணாமல் போன படையினரின் பெற்றோர் உறவினர் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தாமாக முன்வந்து தம்மிடம் சரணடைந்த 7 படையினரை புலிகள் விடுதலை செய்ததன் மூலம் சமாதானத்துக்கான கதவைத் திறந்துள்ளனர். அதற்கு பிரதியுபகாரமாக அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் இந்தச்சங்கம் கேட்டுள்ளது.

(இ-5)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ 30

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 28 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:—

யாழ்ப்பாணம்

[124605ஏ], [124605பி], [124936ஏ], [124948ஏ], [124948பி], [126698ஏ], [126743ஏ], [126743பி], [126746ஏ], [126746பி], [126778ஏ], [126779ஏ], [126812ஏ], [126812பி], [126813ஏ], [126822ஏ], [126861ஏ], [126995ஏ], [126996ஏ], [126996பி].

கரவெட்டி

[127283ஏ], [127283பி], [127293ஏ], [121924ஏ].

பருத்தித்துறை

[121906ஏ].

# கைதான இந்திய மீனவர்கள் மன்னார் நீதிபதி முன் ஆஜர்

மன்னார், நவ. 30

இரணைதீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்தவாரம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களும் ஞாயிறன்று மன்னார் மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் இருந்து மருந்துப்பொருள்களை ஏற்றிக் கொண்டு இழுவைப் படகு ஒன்றில் இலங்கை நோக்கி வந்தபோது இந்த நான்கு மீனவர்களும் இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்த நீதிபதி கொழும்பு மீரிகான பகுதியில் உள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் தடுப்பு முகாமில் அவர்களை ஒப்படைக்குமாறும் —

இது குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவருக்கு அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(இ-7)

# மன்னாரிலிருந்து மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு

வவுனியா, நவ 30

மன்னார்ப் பகுதியில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதால் மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இடம்பெயரும் மக்கள் அனைவரும் மடுத் தேவாலத்திலே தஞ்சமடைந்து வருகின்றனர்.

கறுக்காய்குளம், காத்தான்குளம், மினுக்கன், ஆண்டான்குளம் போன்ற இடங்களிலிருந்து கடந்த சனியன்று ஆயிரக்கனக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மடுப்பகுதியில் ஏற்கனவே 10 ஆயிரம் பேர் தஞ்சமடைந்துள்ளதுடன் தடசனாமருத மடுப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5-164)

# யுனெஸ்கோ ஏற்பாட்டில் போட்டிகள்

யுனெஸ்கோ நிகழ்சித் திட்டத்தின் கீழ் "சமாதானமும் சகிப்புத் தன்மையும்" என்ற கருப்பொருளை உணர்த்தும் நாடகம், நடனம், கவிதை கட்டுரை மற்றும் சித்திரம் ஆகியவற்றுக்கான போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் நாடகம், நடனம்' கவிதை என்பன தரம் 9 தொடக்கம் தரம் 11 வரைக்கும்—

கட்டுரை, சித்திரம் என்பன தரம் 6 தொடக்கம் தரம் 8 வரைக்கும்—நடைபெறவுள்ளன என யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-10]

# பண்டிதமணி ஞாபகார்த்த பரிசுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 30

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நூறாவதுபிறந்த தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு:

### பேச்சுப் போட்டி

★ 1 ஆம் இடம்—இ நிருசா [மகாஜனாக் கல்லூரி)

★ 2 ஆம் இடம் — இ சஞ்சீவ் (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

★ 3 ஆம் இடம் — டொ. பியாட்றிஸ் (வயாவிளான் ம. ம. வித்தி.]

### ஆறுதல் பரிசுகள்

சி. அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி) மோ. மோகனா (வல்வை சிவகுரு வித்தியாசாலை) செ. ஆர்ச்சனா(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), க. சுபஜீபன்(நவாலிம.வித்தி) நா. கோபிகா(பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி) தி. ஜானுஜா (கொக்குவில் இ.க )நா.(ராதை கரவெட்டி ம. ம. வித்தி.)

### கட்டுரைப் போட்டி

★ 1 ஆம் இடம்: ஆ. சஞ்சீவன் (கொக்குவில் இ. க)

★ 2 ஆம் இடம்: ப. இராயேஸ் (ஹாட்லிக் கல்லூரி)

★ ஆம் இடம்: த. பிரபாகரன் [விக்ரோரியாக் கல்லூரி]

### ஆறுதல் பரிசுகள்

சி; விஜிதா (நெல்லியடி ம. ம. வித்தி.) கி. யுபாரதா [பருத்தித்துறை மெதடிஸ்த ம. உ. பாடசாலை], நா. மஞ்சுளா [வேம்படி மகளிர் கல்லூரி), ம. நிரேஸ் (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி), சு. ஞானேஸ்வரி (சாவகச்சேரி இ. க)

### மரபுக் கவிதைப் போட்டி

சு. முரளிதரன் [உடுப்பிட்டி அ. மி. கல்லூரி]

மேற்படிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் முதலாம் இடம் பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கமும் இரண்டாம் இடம்பெற்றவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும் மூன்றாம் இடம்பெற்றவர்களுக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா டிசெம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். [இ-8)

# செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 30

மாவட்ட ரீதியாக அண்மையில் நடைபெற்ற சித்திரக்கல்வி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான செய்முறைப் பரீட்சை நேற்று யாழ். கல்வி வலயப் பணிமனையில் நடைபெற்றது.

மேற்படி பரீட்சையில் 40 ஆசிரியர்கள் பங்கு பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

# ஒளிவிழா

தென்மராட்சி, நவ. 30

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் ஆ.முத்தையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு. எரிக் றொசான் அடிகளும், சிறப்பு விருந்தினர்களாகப் பளை கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளை, யாழ். வட்டார திருவுளச் சபை இயக்குநர் ஆசிரியர் அ. மருசபின் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

★ ★ ★

மூளாய், நவ. 30

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் 'ஒளிவிழா' எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த விழாவை பிரதேச செயலக நலன்புரிச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. [ஐ-8-99]

# காரைநகரில் மாடுகளினால் பெரும்போகப் பயிர் நாசம்

காரைநகர், நவ. 30

காரைநகரில் பெரும் போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் வயல்களில் கட்டாக்காலி மாடுகள் சேதம் விளைவித்து வருகின்றன.

சில விஷமிகள் தமது வளர்ப்புப் பசுக்களை பகலில் கட்டிவைத்து விட்டு மாலையில் பாலைக் கறந்து விட்டு இரவில் வயல்களில் மேயவிடுகின்றார்கள் என்று கூறப்படுகிறது.

இரவு வேளைகளில் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பதால் விவசாயிகள் இந்தக் கட்டாக்காலிகளை விரட்டவோ, பிடித்துக் கட்டவோ முடியாதுள்ளனர்.

[இ-73]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா இதயசுத்தியுடன் பேசவேண்டும்

## ஜோசப் எம். பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 30

மரபுமுறைப் போரில் விடுதலைப் புலிகள் பெரும் வெற்றியினை ஈட்டியுள்ளனர். எனவே இதனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதய சுத்தியுடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரை குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ ரீதியில் வலுவான நிலையில் இருந்து கொண்டு சமாதானப் பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அழைப்பு விடுத்திருப்பது வரவேற்கத்தக்கது எனவும் அவர் கூறினார்.

ரெலோ அமைப்பின் முதல்வரான எஸ். ஸ்ரீகாந்தா கருத்து வெளியிடுகையில், ''சமாதானப் பேச்சுக்களுக்கான ஆர்வத்தை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் பேச்சுவார்த்தை சாத்தியப்படாது. எனவே ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் சமாதானப் பேச்சுக்கான வாய்ப்பு உண்டு எனக் கருதுகின்றேன்'' —என்றார்.

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் தலைவரின் மாவீரர் தின உரையை அடிப்படையாகக் கொண்டு புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தப் போவதாகத் தெரிவித்தார்.

(இ-7)

# நிவாரணத்துக்காக தரமான அரிசியையே செயலகம் வழங்குகிறது

## அரச அதிபர் விளக்குகின்றார்

யாழ்ப்பாணம், நவ. 30

நிவாரணத்திற்கு விநியோகிப்பதற்கென யாழ். செயலகத்தினால் ப. நோ. கூ. சங்கங்களுக்குத் தரமான அரிசியே வழங்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

பழுதடைந்த — தரமற்ற— அரிசி நிவாரணமாக வழங்கப்படுவதாக யாழ். செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாடு தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிவாரணத்துக்கு பழுதடைந்த அரிசி ஒருபோதும் செயலகத்தில் வழங்கப்படுவதில்லை என்றும்—

யாழ். செயலகத்தினால் ப. நோ. கூ. சங்கங்களுக்கு அரிசி விநியோகிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர் போன்றோர் நேரில் வந்து பார்வையிட்டு அரிசியைக் கையேற்கவேண்டும் என்றும் —தெரிவித்தார்.

(உ-5)

# விசேட அ. அ...

(7 ஆம் பக்கத் தொடர்)

...டைமுறைகளுக்குப் பின்...ரே ஒருவர் விசேட அடை...ள அட்டையைப் பெற்...கொள்ள முடியும்.

### ...பொதுமக்கள் சிரமம்

...ந்த நடைமுறை அமு...கு வந்தபின்னர் கப்பல், ...ன மூலம் மீளக்குடிய...த நூற்றுக்கணக்கா...ர் ஐந்து மாதங்களுக்கு ...னர் கிராம உத்தியோ...த்தர்கள் மூலம் விண்ணப்...த்திருந்தும் இன்றுவரை ...விசேட அடையாள அட்டை...களைப் பெற்றுக்கொள்ள...இல்லை எனத் தெரிய வருகின்றது.

...துமக்கள் கிராம உத்தி...த்தர்களிடம் சென்று ...த்தால் அவர்கள் பிர...தேச செயலகங்களில் ஒப்ப...டைக்கப்பட்டதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றனர். பிரதேச செயலகங்கள் ...விலீ அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் பொதுமக்கள் என்ன செய்வது எனத் திண்டாடுகின்றனர்.

பல சிரமங்களுக்குப் பின்னர் யாழ். மாவட்ட சிவில் நிர்வாக அலுவலக அதிகாரியினால் விசேட அடையாள அட்டைப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து ...தேச செயலகங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களில் நிழற்படம் இல்லை; மீளக்குடியமர்ந்த விமான/கப்பல் பற்றுச் சீட்டின் நிழற்பிரதி இணைக்கப்படவில்லை; தேவையான ஏனைய ஆவணங்கள் இல்லை என குறிப்பிடப்பட்டே விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன. கிராம உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களுடன் சகல ஆவணங்களையும் இணைத்தே பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கின்றனர் பிரதேச செயலகங்களிலும் பரிசீலனை செய்யப்பட்டே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

### பொறுப்பாளி யார்?

இந்த நிலையில் தவறவிடப்படும் ஆவணங்களுக்கு யார் பொறுப்பாளி எனத் தெரியாமல் இருக்கின்றது. பல இடங்களில் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் ஆவணங்களை ஒப்படைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்கள் இன்று படாத பாடுபடுகின்றனர்.

விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இப்படியான கடினமானதொரு நடைமுறையொன்று இருக்கின்றது எனத் தெரியாத படையினர் சோதனைச் சாவடிகளில் பொதுமக்களிடம் விசேட அடையாள அட்டைகளை காண்பிக்குமாறு கேட்டு துன்புறுத்துகின்றனர்.

கப்பல் அல்லது விமானப் பற்றுச் சீட்டுக்களை காண்பித்தாலும் ஏன் இன்னும் விசேட அடையாள அட்டை கிடைக்கவில்லை என கேள்வி கேட்கின்றனர்.

இந்த நிலையில் பொதுமக்கள் இன்று அடையாள அட்டைத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் போது பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவது போல விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவுடன் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

பொதுமக்களின் நியாயமான இந்த வேண்டுகோளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமானதும் அத்தியாவசியமானதும் ஆகும்.

# பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவையொட்டி மக்கள் வங்கிப் பல்கலைக்கழகக் கிளையின் அநுசரணையுடன் பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (3)

* * *

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலய ஆரம்பக் கல்விக் கட்டட திறப்பு விழாவும் பரிசளிப்பு நாளும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் சி. கந்தசாமி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்வி அலுவலர் நா. சத்தியநாதனும் கலந்து கொள்வர்.

(உ-117-133)

* * *

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய பரிசளிப்பு நாள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வே. விநாயகமூர்த்தி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. கணேசனும் கலந்து கொள்வர்.

(உ-133)

* * *

உசன் இராமநாதன் மகா வித்தியாலய பரிசளிப்பு நாளும் பாடசாலைத் திறப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 8 30 மணிக்கு அதிபர் ஐ. வரதராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கு. விமலதாஸும் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ. கயிலைநாதனும் சிறப்பு விருந்தினராக கொடிகாமம் கோட்டக்கல்வி அதிகாரி அ. கைலாயபிள்ளையும் கலந்து கொள்வர்.

(உ-133)

# புலிகள் இருவர் மரணம்

வவுனியா, நவ. 30

கடந்த 28 ஆம் திகதி ஊரியான் பகுதியில் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

சாந்திகா (தில்லையம்பலம் சந்திராதேவி-மட்டக்களப்பு) விவேகாநந்தி (அருவ தாஸ் நீபா-மட்டக்களப்பு) ஆகிய இருவ[illegible] ஆவர்.

(உ-4)

# பெரியோரின் ஆசியுடன் பரீட்சை அனுமதி அட்டை

## யாழ். மத்திய கல்லூரி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 30

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்றைய தினம் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி ஆசிபெற்று தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆசிரியர் கு. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, பரி பேதுரு தேவாலய முகாமைக் குரு வண. பிதா கருணசேகர மற்றும் புனித அடைக்கல மாதா ஆலய பங்குத் தந்தை வண பிதா பயஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆசி வழங்கினர்.

பின்னர் மாணவர்கள் தமது பெற்றோர், அதிபர், ஆசிரியர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் அமைக்கப்படவிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வண பிதா பீற்றர் பேர்சிவல் அடிகளார் ஆகியோரது சிலைகளுக்கான அடிக்கல் நடும் வைபவமும் கல்லூரி அதிபர் க இராசதுரை தலைமையில் நேற்று நடைபெற்றது.

இச்சிலைகளை அமைப்பதற்கு உதவியாக யாழ் வேணி களஞ்சிய உரிமையாளர் கங்கைவேணியன் ரூபாய் 30 ஆயிரத்தை கல்லூரி அதிபரிடம் வழங்கினார்.

(உ-7-9)

# விவசாயிகளுக்கு பயிற்சி

வடமராட்சி, நவ 30

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த — தெரிவு செய்யப்பட்ட — விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை புலோலி கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. உலக உணவு நிறுவனப் பிரதிநிதிகள் இப்பயிற்சியை வழங்குவார்கள்.

கோவா, கத்தரி, கறிமிளகாய், வெண்டி ஆகிய பயிர்களைச் செய்கை பண்ணும் விவசாயிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

(உ-173)

# டக்ளஸ் கூறுகிறார்: சந்திரிகாவை ஆதரிப்பது பேரம் பேசுவதற்காகவே!

## கட்சியையும் பலப்படுத்தலாமாம்

அம்பாறை, நவ. 30

''ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவை எமது கட்சி ஆதரிக்க முடிவு செய்திருப்பது எமது கட்சியைப் பலப்படுத்திக் கொள்வதற்கே''

—இவ்வாறு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணம் காரைதீவு ஈ. பி. டி. பி அலுவலக முன்றலில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தொலைபேசி மூலமாக உரையாற்றும் போதே அவர் இப்படித்தெரிவித்ததாக அரசசார்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது.

அரசுடன் மேலும் பேரம் பேசுவதற்காகவும் கொள்கையை வலுப்படுத்துவதற்காகவுமே ஜனாதிபதி சந்திரிகாவை நாம் ஆதரிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

எமது பிரச்சினையை ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பதை அனுபவவாயிலாகவும் நடைமுறையிலும் நாம் அறிந்துகொண்டதனால் தான் ஜனநாயக வழிக்குத் திரும்பினோம் என்று அவர் சொன்னார்.

(உ-3)

# அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சிக் கல்விவலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஏற்கனவே உள்ள நிகழ்ச்சித் திட்டப்படி நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கூட்ட மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-133)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 30

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றும் இடமாற்றம் பெற்றும் செல்லும் மூன்று ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் நடத்தப்படும் பாராட்டுவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது:

ஓய்வுபெறும் பொ. சிவலிங்கம், இடமாற்றம் பெறும் த. அருணகிரிநாதன், திருமதி ஆனந்தி குமாரதாஸ் ஆகியோரின் சேவை நலன் பாராட்டு விழாவே நாளை நடைபெறவிருக்கின்றது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் வேலணை கிழக்கு மகாவித்தியாலய அதிபர் என். பத்மநாதன் உட்படப் பலர் பாராட்டுரைகளை வழங்குவர். மேற்படி வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் த. குமாரசாமி இந்த நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.

(உ-7)

# 2 படையினர் காயம்

மட்டக்களப்பு, நவ 30

நேற்று முன்தினம் நள்ளிரவு மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் வந்தாறுமூலையில் வீதிக் கண்காணிப்பு ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

(உ-5-21)

# படையினரின் டிரக் தடம் புரண்டது

புன்னாலைக்கட்டுவன். நவ 30

பலாலியில் இருந்து படையினருடன் யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த படையினரின் டிரக் ஒன்று கடந்த சனியன்று நண்பகல் 12 30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையில் உள்ள வாழைத்தோட்டத்தில் தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த இரு கடற்படையினர் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் பலாலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பாரம் தூக்கியின் உதவியுடன் டிரக் மீட்கப்பட்டது

அண்மைக் காலத்தில் இப்பகுதியில் மூன்றாவது தடவையாக வாகனம் தடம்புரளும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(உ-7-133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசையும் புலிகளையும் பேச வைக்க சம்பந்தன் எடுத்த முயற்சி தோல்வி!

## அன்ரன் பாலசிங்கம் காட்டமாகப் பதில் கொடுத்தார்

கொழும்பு, நவ. 30

லண்டன் சென்றிருந்த — தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட எம் பியுமான — ஆர். சம்பந்தன் அங்கு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி இச் சந்திப்பின் போது சம்பந்தன் கோரியதாகவும்—

''இப்போது அதற்கான சூழ்நிலை இல்லை'' என்று நேரடியாக — வெட்டு ஒன்று துண்டு இரண்டாக — அன்ரன் பாலசிங்கம் பதிலளித்ததாகவும் — கூறப்படுகின்றது.

பிரிட்டன் தரப்பில் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளை அடுத்து, பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் தொழில் கட்சி எம். பி. ஒருவரின் முன்னிலையில் இச்சந்திப்பு இடம் பெற்றது. அது சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

''சில வருடங்களுக்கு முன்னர் சுவிட்ஸர்லாந்திலும் பிரிட்டனிலும் உள்ள புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க சம்பந்தன் முயன்றார். ஆனால் நாங்கள் மறுத்து விட்டோம். எனினும் பிரிட்டிஷ் தரப்பு மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதால் இம்முறை சந்திப்புக்கு இணங்கினோம். பிரிட்டனுக்கு மரியாதை தருவதற்காகவே இச் சந்திப்பு இடம்பெற்றது'' — என்று புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

''சம்பந்தனின் இந்த விஜயத்தைத் தனியாகக் கூட்டணித் தரப்பின் முன் முயற்சியாக நாம் கருதவில்லை. சந்திரிகாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் சம்பந்தன் என்ற அடிப்படையில் பார்த்தால் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவதற்காக அரசுத் தரப்பினால் உத்தியோகபூர்வமாக அனுமதியளிக்கப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற தூதுவராகவே நாம் அவரைக் கருத வேண்டியுள்ளது. இந்தச் சந்திப்புக்காகப் பிரிட்டிஷ் அதிகாரிகள் எடுத்த அதீதமுயற்சியும் இதை உறுதிப்படுத்துகின்றது. மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்யும் முன் முயற்சி நோக்கம் இல்லாவிட்டால் இத்தகைய ஒரு சந்திப்பை ஏற்படுத்துவதற்காக அவர்கள் இவ்வளவு சிரத்தை எடுத்திருக்கமாட்டார்கள்'' — என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

''பேச்சுக்கான கதவு திறந்திருப்பதாக நாம் திரும்பத் திரும்ப அழைத்தபோது அதை நிராகரித்து இராணுவத் தீர்வை நாடி நின்ற சந்திரிகா இப்போது இராணுவத் தோல்விகள், பின்னடைவுகளை அடுத்துப் பேச்சை ஆரம்பிக்க முயல்கின்றார். தான் மீண்டும் வெற்றிபெற்றால் இதோ சமாதானம் வந்துவிடும் என்ற ஒரு மாயை நிலையை சிங்கள, தமிழ் மக்களின் மனதில் தேர்தல் சமயத்தில் ஏற்படுத்தச் செய்வதற்காகவே பேச்சு முயற்சியை அவர் இப்போது ஆரம்பித்திருக்கின்றார். ஆனால் எங்களை இலகுவாக ஏமாற்றிவிட முடியாது. நாங்கள் எதற்காக சந்திரிகாவுக்கு அரசியல் பிணை கொடுக்கவேண்டும்? எங்களுக்குத் தெற்கு அரசியலில் கவனம், கவலை இல்லை நாங்கள் பக்கம் சார விரும்பவில்லை.

''சந்திரிகா அரசு இப்போது நொண்டி வாத்து நிலையில் உள்ளது. தேர்தலை எதிர்நோக்கி நிற்கும் கட்சியுடன் இப்போது நாம் ஏன் பேச வேண்டும்? முதலில் தேர்தல் நடக்கட்டும். அதில் வெற்றி பெறுபவரின் போக்கைப் பார்த்து நாம் தீர்மானிக்கலாம்.

சிங்கள மக்கள் தங்கள் தலைவரைத் தெரிவு செய்யட்டும். அதன் பின்னர் சமாதானப் பேச்சில் ஈடுபடுவதற்கு அந்தத் தலைவர் இதயசுத்தியுடன் முன் வந்தால் நாம் அப்போது சமாதானப் பேச்சுக் குறித்துத் தீர்மானிக்கலாம்.

''விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இதயசுத்தியுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள்''

—இப்படி அன்ரன் பால சிங்கம் சம்பந்தனிடம் கூறி தாகவும் அந்த வட்டார கள் தெரிவித்ததாக அந் வார இதழ் குறிப்பிட்டு ளது. (உ-3)

### 68574 சதுர.....

(முதலாம் பக்கத் தொடர்)

வெடி இருக்கும் எனச் சந்தேகிக்கப்பட்டு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும்—

அந்த வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும்— கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புவேலிகளில் பொருத்தப்பட்ட கருவிகள் திருடப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய சம்பவங்களைத் தடுக்க பிரதேச செயலக மட்டத்தில் சமூகத்தலைவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது (இ-3)

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடம்பெற்றதாக அறிவிக்கப் பட்டது.

கனடாவில் இயங்கி வரும் மூன்று தமிழ் வானொலிகளும் இந்த நிகழ்வினை நேரடி ஒலிபரப்புச் செய்தன.

இந்த மாவீரர் தின நிகழ்வில் தமிழகத்தைச் சேர்ந்தவரும், தமிழ்த் தமிழர் இயக்கத் தலைவருமான பேராசிரியர் சு. வீரபாண்டியனின் சிறப்பு உரையும் வானம்பாடி இசைக்குழுவின் இசையுடன் தமிழக பாடகர் குப்புசாமியின் எழுச்சிப் பாடல்களும் இடம்பெற்றன.

அங்கு கூடியிருந்த தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்துக்கென பெருமளவு பொருள் உதவிகளை வழங்கினர். பெண்களில் பலர் தமது தாலிக்கொடிகளைக் கூட மனமுவந்துகொடுத்தனர் என்று கூறப்பட்டது.

மாவீரர் தின நிகழ்வுகளுக்காக ரீ எஸ் ஏ ஸ்டேடியம் காலை 9. 30 மணி முதல் இரவு 11. 30 மணிவரை மக்கள்கூட்டம் நிறைந்து காணப் பட்டது. (உ-4)


விவசாயிகளே!

இதோ வந்து விட்டது!!

விதை உருளைக் கிழங்கு

(டிசிறி வகை)

உடன் பெற்றுக் கொள்ளவும்

M. L. & Co.

Managed by

Eswaran Brothers Foods (Pvt.) Ltd.

235, Hospital Road, JAFFNA.

T. P. 2506 (71877)



பெற்றோரின் அபிலாசைகளை நிறைவேற்றும் குறிக்கோள் உள்ள ஒழுக்கமான மாணவ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் கால் நூற்றாண்டுக்கும் மேலான இணையற்ற சேவையில்...

The Express Institute

IRUPALAI KOPAY

கல்வி ஆண்டு 2000

தரம் 03 முதல் 11 வரை

புதிய பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் டிசம்பர் 01 முதல் வழங்கப்படுகின்றன.

(71274)


### மடு...

(முதலாம் பக்கத் தொடர்)

வழங்கமுடியாத நிலையில் நோயாளிகளை மல்லாவி மற்றும் முழங்காவில் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுககுக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7-164)


நேற்றைய வீடியோ CD வெளியீடு!

தாஜ்மஹால்

மனம் விரும்புதே உன்னை

சுந்தரி நீயும் சுந்தரன் நானும்

பிரதி விலை: ரூபா 300/-

ஆர்க் வீடியோ லைபிறறி

அம்மன் வீதி.

(சி/10038)



எமது வீடியோ CD வெளியீடுகள்!

மனோஜ்கர் – ஜனனி ஐஸ்வர்யாராய் நடித்த

தாஜ்மஹால்

பிரபு – மீனா நடித்த

மனம் விரும்புதே உன்னை

வீடியோ ஆனந்த்

மானிப்பாய்.

(71388)


### சியம்பலாண்டுவவில்

## படை முகாம் வாசலில் குண்டுப் பார்ஸல் மீட்பு

### பஸ்ஸிலிருந்த 4 தமிழர்கள் கைது

மொனறாகல சியம்பலாண்டுவ விசேட அதிரடிப்படை முகாமின் வீதிச் சோதனைச் சாவடியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை குண்டுப் பார்ஸல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அச்சமயம் அங்கு நிறுத்தி சோதனை செய்யப்பட்ட பஸ்ஸில் அமர்ந்திருந்த நான்கு தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கல்முனையிலிருந்து கொழும்புக்கு சென்று கொண்டிருந்த மேற்படி பஸ்ஸின் உளளே சென்று படையினர் சோதனையை நடத்திவிட்டு கீழே இறங்கிய சமயமே இக் குண்டுப் பார்ஸலைக் கண்டு பிடித்தனர் என்றும் —

இதனைத் தொடர்ந்தே நான்கு தமிழர்களும் கை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

கணிப்பது கடினம். கடந்த காலத்தில் இப்படிப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் இடையில் முறிவடைந்துவிட்டன.

பேச்சுக்குள் ஆரம்பிப்பதற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். புலிகள் ஆயுதங்களை போட்டு விட்டு ஒரு தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட முன்னர் அரசு விடுதலைப் புலிகளுடன் இரகசியப்பேச்சுக்களை நடத்தியது உண்மையே.

இந்தப் பேச்சுக்களில் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா ஆகியோருடன் நானும் கலந்து கொண்டேன்.

இரகசியப்பேச்சுக்கள் ஆக்கபூர்வமான விளைவுகளை கொண்டுவருமேயானால் அப்படி நடத்துவதில் தவறில்லை — இப்படி அவர் கூறினார். (உ-5)

### கண்ணி வெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

தப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் பணி மீண்டும் ஆரம்பிக்கும் என்றும் —

அச்சமயம் அதிநவீன கருவிகள் பணிக்குப் பயன்படுத்தப் படவிருக்கின்றன என்றும் —

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரங்கள் மற்றும் புல்பூண்டுகளுக்கு இடையில் உள்ள கண்ணிகளை அகற்ற முடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதற்காகவே நவீன உபகரணங்கள் எடுத்துவரப்படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-3)

### 7 சிப்பாய்களும்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை வவுனியா வைத் சாலையில் அனுமதிக்கப்ப பரிசோதனை செய்யப்ப னர்.

பின்னர் மேலதிக பரி னைக்காக அநுரா வைத்தியசாலையில் அ திக்கப்பட்டு, நேற்று ம உறவினர்களிடம் ஒப் பதற்காக கொழும் கூட்டிவரப்பட்டனர் இராணுவப் பேச்சாளர் வித்தார்.

அந்த ஏழு பேரும் நல் தேகாரோக்கியத்துடன் இரு பதாக அ களின் உறவின கள் தெ தனர். (உ-5)

### கறுப்புப்பட்டி...

(முதலாம்பக்கத் தொ

வழமையான செய களில் ஈடுபடவேண்டும் சங்கம் கேட்டுள்ளது.

மடுத்தேவாலயத்தில் உயி ழந்தவர்களுக்கு அஞ்ச செலுத்துவதுடன்—

எதிர் காலத்தில் சம தலங்கள், பாடசாலைக வைத்தியசாலைகள் போன் பொது இடங்களின் மீ விமான மற்றும் ஷெல் தா குதல்கள் நடத்தக் கூடா என்று இந்தப் போராட்டம் ஊடாக வலியுறுத்த வேண்டும் என தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாள த. மகாசிவம் கேட்டுள்ளார்.

மடுவில் தங்கியுள்ள களுக்கு உதவுவதற்கு வர்கள் தம்மால் இயன்ற அளவு உடுபுடைவைகளை ாடசாலை அதிபர்களிட நாளை முதல் 3 ஆம் திகதி வரை ஒப்படைக்கும்படியும் அவர் கோரியுள்ளார்.

அதேநேரம் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாண வர்களுக்கு கறுப்புப் பட்டி கள் வழங்க ஏற்பாடு செய் மாறு அதிபர்களை சங்க தின் இரேஷ்ட துணை பொதுச்செயலாளர் த. ப லிங்கம் கேட்டுள்ளார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org